**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 206** **நாள்: 02.12.2024**

**சென்னையில் கனமழை முடிவுற்றதைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் 871 பூங்காக்களிலும் தீவிரத் தூய்மைப் பணி மேற்கொள்ளப்பட்டு, நாளை (03.12.2024) காலை முதல் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு மீண்டும் திறக்கப்படுகிறது. மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

ஃபெஞ்சல் புயலினைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் கனமழையின் காரணமாக விழுந்த மரங்கள் மற்றும் கிளைகள் மாநகராட்சிப் பணியாளர்களால் மரஅறுவை இயந்திரங்கள் மூலம் அகற்றப்பட்டு, மாநகராட்சியின் வாகனங்கள் மூலம் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டு, அவ்விடத்தில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள பூங்காக்கள் ஃபெஞ்சல் புயல் மற்றும் கனமழையின் காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மூடப்பட்டிருந்தது. கனமழை முடிவுற்றதைத் தொடர்ந்து, மாநகராட்சியின் 871 பூங்காக்களிலும் தீவிரத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, விழுந்த மரங்கள் மற்றும் மரக்கழிவுகள், குப்பைகள் அகற்றப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு நாளை (03.12.2024) காலை முதல் மீண்டும் திறக்கப்படுகிறது.

மேலும், தீவிரத் தூய்மைப் பணியின் கீழ், கனமழையின் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சேகரமான மரக்கழிவுகள், குப்பை மற்றும் கட்டிடக் கழிவுகள் மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் மூலம் அப்புறப்படுத்தப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட திருவொற்றியூர் மண்டலம் முதல் சோழிங்கநல்லூர் மண்டலம் வரை நேற்று (01.12.2024-ஞாயிற்றுக் கிழமை) 9,002 தூய்மைப் பணியாளர்கள் மூலமாக 3,942 மெட்ரிக் டன் குப்பைகள் மற்றும் 255.02 மெட்ரிக் டன் கட்டிடக் கழிவுகள் அகற்றப்பட்டது. மேலும், இன்று (02.12.2024) மதியம் 2 மணி வரை 3680.03 மெட்ரிக் டன் குப்பை மற்றும் கட்டிடக் கழிவுகள் அகற்றப்பட்டது. இந்தத் தீவிரத் தூய்மைப் பணிகள் தொடர்ந்து தீவிரமாக நடைபெற்று வருகிறது.

பொதுமக்களுக்கு நோய்த்தொற்று பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கும் பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து மண்டலங்களிலும் 192 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட்டு, 10,226 நபர்களுக்கு மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த முகாம்களில் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு பணியாளர் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து

வருகின்றனர். மேலும், இந்த மருத்துவ முகாம்களில் பொதுமக்களுக்கு சளி, காய்ச்சல், இருமல், தோல் சம்பந்தப்பட்ட நோய்கள், சேற்றுப்புண் உள்ளிட்ட மழைக்கால நோய்கள் மற்றும் இதர மருத்துவ சிகிச்சைகளும், நிலவேம்பு குடிநீரும் வழங்கப்பட்டன.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் /மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**